**காார்கில்ஸ் வங்கி மாஸ்டர்காட் படத்துடனான அட்டை - வழிகாட்டல் விதிமுறைகள்**

*கார்கில்ஸ் வங்கி மாஸ்டர்காட் படத்துடனான அட்டையில் பின்வரும் படங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.*

1. ©, ® அல்லது ™ அடையாளங்கள் கொண்ட படங்கள் அடங்கலாக, பிரபலமான அல்லது அங்கீகாரம் பெற்ற வர்த்தகச் சின்னங்கள் அல்லது காப்புரிமை கொண்ட படங்கள்.

2. வர்த்தகநாம உற்பத்திகள் மற்றும் சேவைகள் அடங்கலாக விளம்பர, ஊக்குவிப்புப் படங்கள்

3. தொலைபேசி இலக்கங்கள், URL விபரங்கள், கணக்கு இலக்கங்கள் அல்லது மின்னஞ்சல் முகவரிகளைக் கொண்ட படங்கள்.

4. பிரபலங்கள்/இசைக்கலைஞர்கள்/விளையாட்டு வீரர்கள்/பொழுதுபோக்கு பிரபலங்கள்/பொதுத் துறையில் இருப்பவர்கள்/கார்ட்டூன் பாத்திரங்கள் போன்ற பிரபலமான அல்லது அங்கீகாரம் பெற்ற படங்கள்.

5. அநாகரிகமான நிர்வாண அல்லது அரை நிர்வாணக் காட்சிகள் அடங்கலாக இழிவுபடுத்தும் அல்லது பாலியல் படங்கள்.

6. ஆயுதங்கள் அல்லது சுடுகலன்கள் சார்ந்த படங்கள் அடங்கலாக வன்முறை அல்லது இழிவுபடுத்தும் வகையில் இனவாதம் சார்ந்த படங்கள்.

7. சமூகவிரோத அல்லது ஆபாசமான நடத்தையைச் சித்தரிக்கும் படங்கள்.

8. மது அருந்தும் (அல்லது நிறைவெறி), புகைப்பிடிக்கும், போதைப்பொருள் அல்லது சூதாட்டத்தை மையமாகக் கொண்ட, அல்லது பராயமடையாதோரை மது அருந்துகின்றவர்களாக அல்லது புகைப்பிடிப்பவர்களாக காண்பிக்கும் படங்கள்.

9. சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத குழுக்களை அல்லது அரசியல் கூற்றுக்களை சித்தரிக்கும் படங்கள் அடங்கலாக எவ்வகையான சமய அல்லது அரசியல் படங்கள்.

10. பணத்தை அல்லது நாணயத்தை மையமாகக் கொண்ட படங்கள்.

11. வர்த்தகப் பெயர்கள், இலச்சினைகள், சுலோகங்கள் அல்லது அட்டையைத் தொழிற்படுத்தும் எந்தவொரு ஸ்தாபனத்தையும் அடையாளம் காட்டும் ஏனையவை (உ-ம். வீசா, மாஸ்டர் அட்டை, அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் போன்றவை)

12. அவதூறான அல்லது ஆபாசத்தை சித்தரிக்கும் படங்கள்.

13. கார்கில்ஸ் வங்கி, கார்கில்ஸ் வங்கியின் இலச்சினை, அல்லது கார்கில்ஸ் வங்கி டெபிட் அல்லது கடனட்டையைக் காண்பிக்கும் படங்கள்.

14. ஏனைய சக வங்கிச்சேவை அல்லது நிதியியல் நிறுவனங்களின் பெயர்களை அல்லது படங்களை காண்பிக்கும் படங்கள்.

15. இலங்கையின் அல்லது வேறு எந்தவொரு அரசாங்கத்தினதும் அரசியலமைப்பு சார்ந்த எந்தவொரு சின்னங்கள், கொடிகள் அல்லது இலச்சினைகளைக் கொண்ட படங்கள்.